இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 251 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 09 – புதன்கிழமை 22 ஏப்ரல் 2026 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 251 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 09 - Wednesday 22 April 2026 - Dak 16 Pages ₹ 5.00


## வளர்ச்சியும் வளமான எதிர்காலமும் அடுத்த ஐந்து ஆண்டுகளும் தொடர

# தி.மு.கழகக் கூட்டணியை வெற்றி பெறச் செய்வீர்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்காளர்களுக்கு அன்பு வேண்டுகோள்!

**சென்னை, ஏப். 22 -**

**“வளர்ச்சியும் வளமான எதிர்காலமும் அடுத்த ஐந்தாண்டுகளும் தொடர தி.மு.கழகம் தலைமையிலான மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணியை வெற்றி பெறச் செய்வீர்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாக்காளப் பெருமக்களுக்கு அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தமிழ்நாடு மீதும், தமிழ் மக்கள் மீதும் நான் கொண்ட பெரும் பாசத்தையும் நாம் எதிர்கொள்ளும் அபாயங்களையும் மனம்விட்டுப் பேசி கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.04.2026) சமூக வலைதளத்தில் மேற்கொண்ட காணொளி பரப்புரையில் ஆற்றிய உரை வருமாறு :-

வணக்கம். எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்?

தேர்தல் பிரச்சாரம் பரபரப்பாகப் போய்க் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் நான் மக்களைச் சந்தித்தாலும், இந்த வீடியோ மூலமாகச் சில விஷயங்களை உங்களிடம் மனது விட்டுப் பேச வேண்டும் என்று நினைக்கிறேன்.

இன்னும் கொஞ்ச நாட்களில் தேர்தல். இந்தச் சமயத்தில் எனக்கு ஒரு விஷயம் மைண்ட்இல் வருகிறது. 2021 இல் இதே போன்று ஒரு சட்டமன்றத் தேர்தல். அந்தச் சமயத்தில் சில பேர் “Stalin is more dangerous than Karunanidhi” என்று சொன்னார்கள். கலைஞரோடு என்னை எப்போதுமே ஒப்பிட முடியாது. அவரை நான் அப்பா என்று கூப்பிட்டதைவிட, தலைவர் என்று கூப்பிட்டதுதான் அதிகம்.

### தமிழ்நாட்டை வஞ்சிப்பவர்களுக்கு நான் டேஞ்சர்தான்!

அப்படிப்பட்ட தலைவரைவிட நான் more dangerous என்று அவர்கள் சொல்லும்போது, எனக்கு ஒன்றே ஒன்றுதான் தோன்றியது. தமிழ்நாட்டை வஞ்சிக்க நினைப்பவர்களுக்கும், நம்முடைய வளர்ச்சியைத் தடுக்க நினைப்பவர்களுக்கும் நான் என்றைக்குமே டேஞ்சர்தான். இதில் தலைவர் கலைஞரைவிட ஒரு படி மேலே இருக்கிறேன் என்றால், அது எனக்குப் பெருமைதானே. ஏனென்றால் இதெல்லாம் நம்முடைய தமிழர்களின் ரத்தத்திலேயே இருக்கிறது.

என் மீது நம்பிக்கை வைத்து நீங்கள் என்னை CM ஆக்கி 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. “ஸ்டாலின் சார், CM ஆனது எல்லாம் ஓகே... இந்த 5 ஆண்டுகளில் மக்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள்?” என்று யாராவது கேட்டால், நம்மால் மணிக்கணக்காக, ஏன், நாட்கணக்காகக்கூடப் பேச முடியும். முக்கியமாக எப்போதுமே தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசை எதிர்த்து, தமிழ் மக்களுக்காகச் சண்டை செய்திருக்கிறேன் என்பதை இன்னும் பெருமையாக



என்னால் சொல்லிக் கொள்ள முடியும்.

### சமூக நீதியுடன்கூடிய வளர்ச்சி!

சமூக நீதியுடன்கூடிய வளர்ச்சி என்பதுதான் நம்முடைய முதன்மையான குறிக்கோள். அந்த வகையில் கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு உதவித்தொகை, மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பேருந்து பயணம், தோழி மகளிர் விடுதி, மக்களைத் தேடி மருத்துவம் என்று, கருவில் இருக்கும் குழந்தையிலிருந்து, வயது முதிர்ந்த மூத்த குடிமக்கள் வரைக்கும் அனைவரும் பயனடைவது போன்று நிறையத் திட்டங்களைக் கொண்டு வந்தோம்.

### கல்விதான் திருட முடியாத சொத்து!

“நம்மிடம் காசு இருந்தால் எடுத்துக் கொள்வார்கள், நிலம் இருந்தால் பிடுங்கிக் கொள்வார்கள்... ஆனால் படிப்பை மட்டும் யாராலும் உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளவே முடியாது” என்று ஒரு சினிமா வசனம் இருக்கிறது. அது நூற்றுக்கு நூறு உண்மை. நான் பதவியேற்றதிலிருந்து மாணவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் இதே கருத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கல்வி ஒன்றுதான் உங்களிடமிருந்து யாரும் திருட முடியாத ஒரே சொத்து. அதனால்தான் பள்ளியில் காலை உணவுத் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப், அரசுப் பள்ளியில் படித்த மாணவ-மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் உதவித் தொகை, ‘நான் முதல்வன்’ திட்டம் என்று கல்விக்காக மட்டும் இந்த ஆட்சியில் அவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

### இன்னும் உயரம் தொடுவோம்!

நீங்கள் எந்த டேட்டாவை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள். தொழில் துறை, விவசாயம், கல்வி என்று அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு டாப்இல் இருக்கும். அதற்கு அடையாளமாக 14 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதமாக, எந்த மாநிலமும் தொடாத இரட்டை இலக்கத்தைத் தொட்டு இருக்கிறது. இன்னும் உயரம் தொடுவோம் என்ற உறுதியும் எனக்கு இருக்கிறது.

இப்படி அனைத்து வகையிலும் நாம் முன்னேறி இருந்தாலும், ஒரு சில குறை களும் இருக்கிறது என்பது எனக்கும் தெரியும். ஏனென்றால் நம்முடைய ஆட்சியைப் பற்றிய விமர்சனம், feedback அனைத்தையும் காது கொடுத்துக் கேட்பவன் நான். குறைகளாகச் சொல்லப்படும் ஒரு சில விஷயங்களில் கூட நாம் மற்ற மாநிலங்களைச் கம்பேர் செய்யும்போது மிகவும் சிறப்பாகத்தான் இருக்கிறோம். இருந்தாலும், அந்தக் குறைகளையும் சரி செய்ய அனைத்து விதமான வழிமுறைகளையும் நாம் ஏற்கனவே நடைமுறைப்படுத்திவிட்டோம். அதன் விளைவுகளை இன்னும் கொஞ்ச நாளில் நாம் பார்ப்போம்.

### முதல் எதிர்ப்பும், நகல் எரிப்பும்!

உங்கள் அனைவருக்கும் தெரியும், கடந்த வாரம் ஒன்றிய அரசு தொகுதி மறுவரையறை என்று ஒரு மசோதா கொண்டு வந்தார்கள். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி, தொழில் வளர்ச்சியில் best performing stateஆக இருக்கும் நம்மைத் தண்டிப்பதற்காகவே அந்த மசோதாவைக் கொண்டு வந்தது போன்று இருந்தது. ஆனால் அந்த மசோதா வந்த அடுத்த நொடி... முதல் எதிர்ப்பும், மசோதாவின் நகல் எரிப்பும் நம்முடைய தமிழ் மண்ணில் என் மூலமாக ஆரம்பித்தது. நாம் கொளுத்திய அந்த நெருப்புதான் இன்றைக்குக் கொழுந்து விட்டு எரிந்து அந்த மசோதாவைச் சாம்பலாக்கி இருக்கிறது.

தேர்தல் நடக்கும் இந்தச் சமயத்திலேயே இவ்வளவு ஆணவத்தோடு நம்மை வஞ்சிக்க நினைக்கிறார்கள் என்றால், இதே தேர்தலில் அவர்களின் அடிவருடி எடப்பாடி பழனிசாமி வென்று ஆட்சிக்கு வந்துவிட்டால் என்னென்ன கொடுமையெல்லாம் இங்கே அரங்கேறும் என்று நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியது இல்லை.

### பா.ஜ.க.வின் பொய் பிரச்சாரம்!

பா.ஜ.க. போன்ற மதவாத சக்திகள் தி.மு.க.வை இந்துக்களுக்கு எதிரான கட்சி என்று பொய்யான ஒரு பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. ஒருபோதும் இந்துக்களுக்கு எதிரான கட்சி இல்லை. எங்கள் ஆட்சியில்தான் ஆயிரக்கணக்கான கோவில்களுக்குக் குட முழுக்குச் செய்திருக்கிறோம். ரூ. 7,000 கோடி மதிப்புள்ள கோவில் நிலங்களை மீட்டிருக்கிறோம்.

> **1970-களில் மிசா என்ற ஒரு போரை அன்றைய ஒன்றிய அரசு நடத்தியபோது அதை எதிர்த்துப் போரிட்டவன்தான் இந்த ஸ்டாலின். அப்போது நான் ஒரு இளைஞன்; கலைஞரின் மகன். இன்றைக்கு நான் அப்பா ஸ்தானத்தில் இருக்கிறேன். இப்போதும் நமக்கு எதிரான போரை எதிர்த்து நிற்கிறேன். எந்தப் பிரச்சினை வந்தாலும் தமிழ்நாட்டையும் - தமிழர்களையும் பாதுகாத்து நிற்பேன். இது என்னுடைய உறுதிமொழி.**

## எந்தப் பிரச்சினை வந்தாலும்

## தமிழ்நாட்டையும் தமிழர்களையும் பாதுகாத்து நிற்பேன்!

இப்படிப் பொய்யான பிரச்சாரம் செய்கிறவர்களுக்கு ஒன்றே ஒன்று சொல்கிறேன்... 60 வருடங்களாகத் திராவிடக் கட்சிகள் ஆளும் தமிழ்நாட்டில் தான் இந்தியாவிலேயே அதிகமான கோவில்கள் இருக்கின்றன.

இன்றைக்கு அ.தி.மு.க. என்ற அடிமை கட்சிக்கு ஓனர் பா.ஜ.க. அவர்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் கிறிஸ்துமஸ் அன்று சர்ச்சில் புகுந்து கலவரம் செய்வது, புல்டோசர் வைத்து இஸ்லாமிய மக்களுடைய வீடுகளை இடிப்பது என்று எவ்வளவோ கொடுமைகள் செய்கிறார்கள். இதெல்லாம் தெரிந்தும் பழனிசாமி அவர்கள் காலில் விழுந்து கிடக்கிறார். ஆனால் சிறுபான்மையின மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் என்றைக்குமே நாங்கள் களத்தில் நிற்போம்; அவர்கள் உரிமைகளுக்காகப் போராடுவோம்.

1970களில் மிசா என்ற ஒரு போரை அன்றைய ஒன்றிய அரசு நடத்தியபோது அதை எதிர்த்துப் போரிட்டவன்தான் இந்த ஸ்டாலின். அப்போது நான் ஒரு இளைஞன்; கலைஞரின் மகன். இன்றைக்கு நான் அப்பா ஸ்தானத்தில் இருக்கிறேன். இப்போதும் நமக்கு எதிரான போரை எதிர்த்து நிற்கிறேன். எந்தப் பிரச்சினை வந்தாலும் தமிழ்நாட்டையும் தமிழர்களையும் பாதுகாத்து நிற்பேன். இது என்னுடைய உறுதிமொழி.

எந்த வகையில் வந்தாலும், எத்தனை முறை முயற்சி செய்தாலும் தி.மு.க. இருக்கும் வரையில் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வும், அவர்களின் கொடூரமான மக்கள் விரோதச் சித்தாந்தமும் வெற்றி பெற முடியவில்லை என்று வரலாறு சொன்னால் போதும். அது மட்டும் போதும்!

### அடிமைகள் வேண்டாம்!

நம் உரிமையை, நம் உழைப்பை, நம் மக்களுடைய கலாச்சாரத்தை, நம் மொழியை அழிக்க வேண்டும் என்று நினைக்கிறவர்களோ, அவர்களுடைய அடிமைகளோ நமக்கு வேண்டாம்.

இந்த வளர்ச்சியும் வளமான எதிர்காலமும் அடுத்த 5 ஆண்டுகளும் தொடர வேண்டும். நான் உங்கள் அப்பாவாக, அண்ணனாக, ஒரு தம்பியாக, ஒரு தோழனாக உங்களிடம் உரிமையோடு கேட்கிறேன். மீண்டும் இந்த நல்லாட்சி தொடர உதயசூரியன் சின்னத்திலும், எங்களது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சின்னத்திலும் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள்.

நன்றி, வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.